செ.வெ.எண் : 970/2017 நாள் : 14.12.17

**கன்னியாகுமரி மாவட்டம்**

**ஒகி புயலினால் பாதிக்கப்பட்டு கரைதிரும்பாத மீனவர்களை கணக்கெடுக்கும் பணி - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு**

**---**

கன்னியாகுமரி மாவட்டம், ஒகி புயலினால் பாதிக்கப்பட்டு கரைதிரும்பாத மீனவர்களை கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வரும் நீரோடி, மார்த்தாண்டம்துறை, வள்ளவிளை, இரவிபுத்தன்துறை, சின்னத்துறை, தூத்தூர், பூத்துறை, இரையுமன்துறை ஆகிய கடலோர கிராமங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.12.17) நேரில் ஆய்வு செய்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில் :-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்டு கரைதிரும்பாத மீனவர்களை கணக்கெடுக்கும் பணி வருவாய்த்துறை மற்றும் மீன்வளத்துறை அலுவலர்கள் மூலம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. ஆழ்கடல் மீன்பிடி தொழிலுக்கு சென்று, ”ஒகி” புயலால் பாதிக்கப்பட்டு காணாமல் போன மீனவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. புயலினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு பல்வேறு நிவாரண உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி 13 வள்ளங்களில் மீன்பிடிக்க சென்ற 35 மீனவர்களும், 34 விசைப்படகுகளில் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச்சென்ற 365 மீனவர்களும் இதுவரை கரைதிரும்பவில்லை எனவும், அனைத்து மீனவர்கள் விவரங்கள் கிடைக்கப்பெறும் வரை தேடுதல் பணி தொடர்ந்து நடைபெறும் எனவும், கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மீன்வளத்துறை துணை இயக்குநர் திரு.லேமக் ஜெயக்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி. பவானிஷிஜா, வட்டாட்சியர் திரு.கண்ணன் ஆகியோர் உடனுள்ளனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்**